மின் துறையில் முடியுருமல் நிலுவையான பணிகள்

*256 வின.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு ஆண்டுக்கு மேல் முடிக்கப்படாமல் நிலுவையிலிருக்கும் Work Orders எத்தனை ?

(இ) அதற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) 12,450.

(இ) முடிவுருமல் நிலுவையில் இருப்பதற்கான காரணங்களாவன—

(1) பணி ஆணைகளின் கீழ்வரும் பெருந்திட்டங்களில் சில, இன்னும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

(2) பெரும்பான்மையான நேர்வுகளில், தொடர்புள்ளவர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் தயார் நிலையில் இல்லை.

(3) சிறப்பான. இயல்பான திட்டங்களின் கீழ் ஏற்படும் தேவையைச் சரிக்கட்ட, பகிர்மான மின் மாற்றிகள், மின் கடத்திகள் முதலியன அரிதான பொருள்கள் போதுமான அளவில் கிடைக்காமை.

(4) ரயில் பாதைகளுக்குக் குறுக்காக மேல்நிலை மின் கம்பிகளை அமைக்க ரயில்வே துறையிடமிருந்து ஒப்புதல் இன்னும் கிடைக்காமை.

(5) சாலை ஓரங்களில் கம்பங்கள் நடுவதற்கு நெடுஞ்சாலைத் துறை மறுப்புகள் தெரிவித்துள்ளமை.

(6) சம்பந்தப்பட்ட ஊராட்சிகளின் தலைவர்கள் பிணைய வைப்பீட்டுத் தொகைகள் செலுத்தாமை.

கார் எண் தகடுகளில் தமிழில் எண்கள்

*257 வின.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மோட்டார் எண் தகடுகளில் தமிழ் எண்களையும் எழுத அனுமதி அளிக்கும் சட்டமியற்றுவது பற்றிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

T. வாடிப்பட்டியில் அரசு பேருந்துகள் நிறுத்துமிடம்

*258 வின—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சென்னை—மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள T வாடிப்பட்டியினை அரசு பேருந்துகள் நிறுத்துமிடமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.